## மார்ச் - 09 - வியாழன்

தூய உரோமைப் பிரான்சீஸ்

### நம்பிக்கையோடு தொடர்ந்து கேட்போம், தேடுவோம், தட்டுவோம்.

### முதல் வாசகம் : எஸ்தர் 12, 14 – 16, 23 – 25

சாவுக்குரிய துன்பத்தில் துடித்த எஸ்தர் அரசி ஆண்டவரிடம் அடைக்கலம் புகுந்தார். பகட்டான தம் ஆடைகளைக் கழைந்துவிட்டுத் துயருக்கும்இ புலம்பலுக்கும் உரிய ஆடைகளை அணிந்துகொண்டார். சிறந்த நறுமணப் பொருள் களுக்கு மாறாகத் தம் தலை மீது சாம்பலையும்இ சாணத்தையும் இட்டுக்கொண்டார். தம் உடலை ஒப்பனை செய்யும் உறுப்புக்களைத் தம் கூந்தலால் மூடிக்கொண்டார். இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரை அவர் பின்வருமாறு மன்றாடினார் “என் ஆண்டவரே! நீர் மட்டுமே எங்கள் மன்னர். ஆதரவற்றவளும் உம்மைத் தவிர வேறு துணையற்றவளுமாகிய எனக்கு உதவி செய்யும். ஏனெனில் நான் என் உயிரைப் பணயம் வைத்துள்ளேன். ஆண்டவரே நீர் எல்லா இனங்களிலிருந்தும் இஸ்ரயேலைத் தெரிந்தெடுத்தீர் என்றும்இ அவர்களின் மூதாதையர் அனைவரிடை யேயிருந்தும் எங்கள் முன்னோரை என்றென்றைக்கும் உம் உரிமைச் சொத்தாக தெரிந்தெடுத்தீர் என்றும்இ அவர்களின் மூதாதையர் அனைவரிடமிருந்தும் எங்கள் முன்னோரை என்றென் றைக்கும் உம் உரிமைச் சொத்தாகத் தெரிந்தெடுத்தீர் என்றும் நீரட அவர்களுக்கு வாக்களித்ததையெல்லாம் நிறைவேற்றினீர் என்றும் நான் பிறந்தநாள் தொட்டு என் குலத்தாரும் குடும்பத்தாரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆண்டவரே எங்களை நினைவு கூரும். எங்கள் துன்பவேளையில் உம்மையே எங்களுக்கு வெளிப்படுத்தும். தேய்வங்களுக்கெல்லாம் மன்னரே அரசுகள் அனைத்துக்கும் ஆண்டவரே எனக்குத் துணிவைத்தாரும். சிங்கத்துக்கு முன் நாவன்மையுடன் பேசும் வரத்தை எனக்கு வழங்கும். எங்களுக்கு எதிராகப் போரிடுபவனை மன்னர் வெறுக்கச் செய்யும். இதனால் அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் அழியச் செய்யும். ஆண்டவரே உமது கைவன்மையால் எங்களைக் காப்பாற்றும். ஆதரவற்றவளும் உம்மைத்தவிர வேறு துணையற்ற வளுமாகிய எனக்கு உதவி செய்யும்.

**பதில்பாடல் :** ஆண்டவரே நான் மன்றாடிய நாளில் எனக்குச் செவி சாய்த்தீர்.

### நற்செய்தி: மத்தேயு 7: 7 – 12

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியது: கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள் தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில், கேட்போர் எல்லாரும் பெற்றுக் கொள்கின்றனர் தேடுவோர் கண்டடைகின்றனர் தட்டுவோருக்குத் திறக்கப்படும். உங்களுள் எவராவது ஒருவர் அப்பத்தைக் கேட்கும் தம் பிள்ளைக்குக் கல்லைக் கொடுப்பாரா? அல்லது, பிள்ளை மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா? தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக் கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா! ஆகையால் பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே.

**தியானம்:** மிகப் பெரிய பிரபல இசைக்கச்சேரி முடிந்ததும் ஒரு சிறுமி சட்டென்று ஓடிச்சென்று, அந்த பாடகரிடம் எங்க வீட்டுக்கு வாங்க மாமா என்று கேட்டு விட்டாள் தயக்கத்துடன் பாடகரும் குழந்தையின் மழலை மொழிக்குச் சரி என்று சொல்லி விட்டார். அப்புறம் என்ன வீட்டில் விருந்தும், மகிழ்வும், மனநிறைவுடன் அக்கம் பக்கத்தாரின் விசாரிப்பும், பாராட்டும், வாழ்த்தும் முக மலர்ச்சியுடன் . சிறுமியின் கேட்கும், தேடும் ,தட்டும் வேட்கை கொஞ்சமும் தணியாத செயல்பாட்டால் ஒரு நல்ல மகிழ்ச்சிகரமான சூழ்நிலை உருவாகியது. கேட்காமல் போவதால்தான் நமக்கும் சரியான பதில்கள் கிடைப்பதில்லை, தேடாமல் சோம்பேறித்தனமாக வாழ்வதால்தான் புதியவற்றை புத்துணர்வை, புதுப்பார்வையை புதிய இலட்சியத்தை கண்டு பிடிக்க முடிவதில்லை. தட்டாமல் பொறுப்பற்று போவதால்தான் புதிய வாசல்கள் நமக்கு அறிமுகமாவதில்லை, நமக்குள்ளே கேட்போம, தேடுவோம், தட்டுவோம் அப்போது தெரியும் நாம் எவ்வளவு சிறப்பானவர்கள் என்று அப்போது தான் தெரியும் இறைவன் நமது தந்தை என்று.